Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 24/2023

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | வீட்டு குடித்தனம் |
| பெயர் | - | நந்தினி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சபரிகார்த்திக் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | எம்.ஜி.ஆர்.நகர் | வயது | - | 26 |
| சாதி | - | - | | | |

**17.10.2023**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை** :

1. நான் வால்பாறை எம்.ஜி,ஆர் நகரில் வசித்து வீட்டு குடித்தனம்செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் கடந்த 05-02-2023 அன்று இரவு 7.00 மணியளவில் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள எனது வீட்டிற்கு முன்பாக நானும், திவ்யா, பிரவீனா ஆகியோர் எனது வீட்டிற்கு முன்பு நின்று பேசிக்கொண்டு இருந்தோம்.

2. அப்போது ஆஜர் எதிரி வின்செென்ட் வந்து ஏன்டீ தேவிடியா முண்டைகளா பேசியிட்டு இருக்கீங்க என்று ஆபாசமாக பேசினார். அப்போது என் கணவர் வந்து ஏன் பெண்களை இப்படி பேசுற என்று கேட்டார். அதற்கு ஏ தாயோலி மகனே கேக்கிறது என்று என் கணவரை பார்த்து ஆஜர் எதிரி சொன்னார்.

3. எப்போது குடிக்கிறதற்கு பணம் கேட்டாலும் நீ கொடுக்கனும் என்று என் கணவரிடம் சொன்னார். பணம் கொடுக்கலனா இந்த கல்லால் அடித்து கொன்னுடுவேன் என்று சொன்னார். காச கொடுக்கலனா என்னோட குழந்தைகளை கழுத்தை நெறித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். எவனும் நிம்மதியாக இருக்ககூடாது என்று சொன்னார். கல்லை எடுத்து அடிக்கவந்தவுடன் நானும், பிரவீனா, திவ்யா ஆகியோர் எனது வீட்டிற்குள் சென்றோம்.

4. அதன்பிறகு பக்கத்து வீட்டுக்காரரான மணிக்குமார், மதன் வருவதை பார்த்த ஆஜர் எதிரி கல்லை

போட்டுவிட்டு ஓடிவிட்டார். அந்த கல்லை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள கல் தான்அது. அதன்பிறகு பயந்துபோய் கல்லை போட்டுவிட்டு ஓடிவிட்டார். என் கணவர் இது சம்பந்தமாக வால்பாறை காவல் நிலையம் சென்று கம்பிளைண்டு கொடுத்தார். கம்பிளைண்டு கொடுத்தபிறகும் உங்களால் தான் என்னை ஜெயில் போட்டார்கள் என்று ஆஜர் எதிரி பேசினார். என்னையும், பிரவீனா, திவ்யா ஆகியோர்களை பார்த்து உங்களுக்கு எல்லாம் ஒரு புருசன் பத்தாது 10 புருசன் வேண்டும் என்று சொன்னார். நான் எதுவும் பேசாமல் வீட்டிற்குள் போயிவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை